**செய்தி வெளியீடு எண்.028** **நாள். 9–1–2008**

**2007– ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் விருது**
**திரு. ஆர். நல்லக்கண்ணு அவர்களுக்கு வழங்கிட தமிழக அரசு முடிவு.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2007 ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது பெற விருதாளரை தெரிவு செய்ய உயர்மட்ட குழு கூட்டம் 9.1.2008 அன்று நடைபெற்றது.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு, அரிய தொண்டாற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை தேர்ந்தெடுத்து டாக்டர் அம்பேத்கர் விருது வழங்குவது 1998 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

சிறந்த அரசியல் வாதியும், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விலும், குறிப்பாகவும் சிறப்பாகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்விலும் அக்கறை மிகக் கொண்டு பல ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வரும் திரு. ஆர். நல்லக்கண்ணு அவர்களின் சிறந்த சேவையைக் கருத்தில் கொண்டு அவருக்கு 2007 ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் விருது வழங்க உயர்மட்ட குழு தெரிவு செய்துள்ளது.

இந்த விருதையும், ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, அறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகா கவி பாரதியார் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருதுகளையும் வரும் 16–1–2008 திருவள்ளுவர் தினத்தன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பிப்பார். விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன், தங்கப்பதக்கமும் அணிவிக்கப்படும்.

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9